INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN

03 பெப்ரவரி 2021

**ஊடக அறிக்கை : இலங்கை அமைதிகாக்கும் படையினரை பயன்படுத்துவதை இடைநிறுத்துக**

**ஜெகானஸ்பேர்க் :** படையினரை வடிகட்டும் பணியில் ஈடுபட்டிருந்த அமைப்பினுடைய சுயாதீனத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை அடிப்படையில் பாதிக்கப்பட்டிருப்பதாக[1] எச்சரிக்கை விடுக்கும் ஐநா மனித உரிமைகள் அமைப்பின் அண்மைய அறிக்கையைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் அமைதிகாப்பு திணைக்களம் இலங்கையில் இருந்து படையினர் இதில் ஈடுபடுத்தப்படுவது அனைத்தையும் நிறுத்த வேண்டும்.

*''படையினரை பயன்படுத்துதற்கு முன்பாக அமைதி நடவடிக்கைகளுக்கான ஐ.நா இனுடைய திணைக்களமானது உரிய அக்கறையை உறுதிப்படுத்தும் சட்டரீதியான ஒரு கடமை உண்டு''* என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். *''மனித உரிமைகளுக்கான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையானது இலங்கையின் படையினர் சரியானமுறையில் வடிகட்டப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதனை நியூயோர்க் தற்போது உறுதிப்படுத்தும் நிலையில் இல்லை எனவும் இந்த ஆய்வு நடவடிக்கையினை மீண்டும் ஜெனிவாவிற்கு நகர்த்துவதற்கு அவரசமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும் உறுதிசெய்துள்ளது.''*

தற்போதைய ஒழுங்குபடுத்தலின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணையகமானது படையினரை வடிகட்டும் நடவடிக்கையை கொழும்பில் மேற்கொண்டு வருகின்றது. மிச்சேல் பாசலெட் சுட்டிக் காட்டியது போல் மனித உரிமைகள் ஆணையகமானது அரசியல் மயமாக்கப்பட்டுள்ளது அத்துடன் அதன் தலைவராக முன்னாள் அமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டதன் மூலம் அதனுடைய சுயாதீன்தன்மையும் பாதிக்கப்பட்டுள்ளது.

போர்க் குற்றங்களில் தொடர்புபட்டதாக ஐ.நாவினால் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு மனிதர்கள் இலங்கை இராணுவத்தினை தலைமை தாங்கவும், பாதுகாப்பமைச்சினை நடாத்துவதற்கும் நியமிக்கப்பட்டது பற்றி தான் குறிப்பாக கவலையடைந்துள்ளதாக மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் மிச்சேல் பாசலெட் மேலும் தெரிவித்துள்ளார்.

[1] A/HRC/46/20.

2019 இல் இராணுவத்தளபதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டதையடுத்து நடவடிக்கைகள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்ட[2] இடங்களைத் தவிர இலங்கையின் அனைத்து அமைதிகாக்கும் படைகளும் ஈடுபடுத்தப்படுவதை அது இடைநிறுத்துவதாக ஐ நா அறிவித்தது. தனது இடைநிறுத்தமானது இலங்கையின் அமைதிகாப்பு படையினரில் கால்வாசிப் பேரைப் பாதிக்கும் எனவும் குறிப்பாக லெபனானில் ஈடுபடுத்தப்பட்டுள்ளவர்களுக்குப் பதிலாக வேறு நாடுகளைச்[3] சேர்ந்த படையினர் ஈடுபடுத்தப்படுவார்கள் என ஐ நா பின்னர் தெளிவுபடுத்தியது.

இதனைவிட, பிரியாவிடை அணிவகுப்புகளில்[4] புறப்பட்டுச் செல்லும் இலங்கைப் படையணிகள் ஒரு போர்க் குற்றவாளி என குற்றஞ்சாட்டப்பட்ட சவேந்திர சில்வாவிற்கு திரும்பத் திரும்ப மரியாதை செலுத்துவது படம் பிடிக்கப்பட்டிருந்தது. 2019[5] இல் இராணுவத் தளபதியாக சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமைக்கு சர்வதேச ரீதியாக பரவலான கண்டனம் தெரிவிக்கப்பட்ட நிலையிலும் இது இடம்பெற்றது. சவேந்திர சில்வாவின்[6] நியமனமானது அவரால் பாதிக்கப்பட்டவர்களை அவமதிக்கும் ஒரு செயல் எனவும் புரிந்துணர்வினை எதிர்க்கும் ஒரு நகர்வு எனவும் ஐ.நா நிபுணர்கள் குழுவொன்று குறிப்பிட்டிருந்தது. இந்தக் கருத்தே அமெரிக்க அரசு[7] , கனடா[8] மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தாலும்[9] எதிரொலித்தது.

2020 பெப்ரவரி பிற்பகுதியில் , குற்றஞ்சாட்டப்பட்ட பாரிய மனித உரிமைகள் மீறல்களுக்காக சவேந்திர சில்வாவையும் அவரது குடும்பத்தையும் அமெரிக்க அரசானது பகிரங்கமாகவே தடை செய்தது[10]. இதனைத் தொடர்ந்து சவேந்திர சில்வாவிற்கு பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதிப் பிரதானி என்ற மிகவும் உயர்ந்த இராணுவப் பதவிநிலையும் மேலதிகமாக வழங்கப்பட்டது அத்துடன் அண்மையின் அவருக்கு நான்கு நட்சத்திர ஜெனரல்[11] என்ற பதவி உயர்வும் வழங்கப்பட்டது.

*“குற்றஞ்சாட்டப்பட்ட போர்க் குற்றவாளிகளுக்கு பதவி உயர்வு வழங்குவதால் இலங்கையின்[12] மனித உரிமைகள் மற்றும் நீதி பற்றிப் பொதுச் செயலாளர் கொண்டுள்ள முதன்மையான நிலைப்பாட்டின் அடிப்படையில் பின்விளைவுகள் உண்டு என்பதை இலங்கை அரசிற்கு ஐ.நா அமைதிகாக்கும் அமைப்பு காட்டும் நேரம் இதுவாகும்,”* என சூக்கா தெரிவித்தார். *“அமைதிகாப்பு பணிகளைப் பெற்றுக் கொள்வது என்பது ஒரு சலுகையே அன்றி உரிமையல்ல அத்துடன் இறுதியாக வெளியிடப்பட்ட OHCHR இன் அறிக்கையானது அந்த நாடானது ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு அது வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றது.”*

**முற்றும்**

---

2 https://www.aljazeera.com/news/2019/9/25/sri-lankan-troops-barred-from-un-peacekeeping-over-new-army-chief
Also A/HRC/46/20 §23.
The UN Department of Peacekeeping Operations said it would suspend future Sri Lankan army deployments, “except where suspension would expose UN operations to serious operational risk”.

3 https://www.un.int/srilanka/news/foreign-secretary-aryasinha-discusses-obstacles-placed-sri-lanka’s-peacekeeping-contribution-un

4 https://www.army.lk/news/mali-bound-next-ccc-salutes-commander-army
6 November 2019 – Mali bound
https://alt.army.lk/vir/content/ccc-army-leaves-mali-un-peacekeeping-mission
13 November 2019 - at airport.
http://www.colombopage.com/archive_20B/Nov13_1605287083CH.phpNovember 2020 South Sudan bound.
https://www.tamilguardian.com/content/accused-war-criminal-sends-sri-lankan-troops-un-peacekeeping-mission
November 2020 – South Sudan bound.
https://www.army.lk/news/sri-lanka-army-manufactured-air-conditioned-mali-bound-unibuffels-ready-shipment-0
June 2020 – vehicles for Mali.

5 OHCHR 19 Aug 2019 Bachelet “deeply troubled” by appointment of new Sri Lankan army chief’
https://www.ohchr.org/en/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=24908&LangID=E

6 https://www.ohchr.org/en/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=24923&LangID=E

7 https://twitter.com/usembsl/status/1163400674643759104?lang=en

8 https://www.canadainternational.gc.ca/sri_lanka/highlights-faits/2019/2019-08-21-statement-declaration.aspx?lang=eng

9 https://eeas.europa.eu/delegations/lebanon/66564/joint-statement_en

10 https://www.state.gov/public-listing-january-2020-march-2020/

11 https://www.army.lk/news/promoted-general-shavendra-silva-honoured-elegantly-dressed-gajaba-regiment-troops-presenting

12 https://www.un.org/press/en/2020/db201102.doc.htm

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT